
கீழ்க்காணும் படத்தொடரை அடிப்படையாகக் கொண்டு 100 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை / கதை எழுது. படத்தொடரின் அடியில் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களையும் சொற்றொடர்களையும் நீ இந்தக் கட்டுரை எழுதுவதற்கு உதவியாகப் பயன்படுத்திக் கொள்ளலாம்.



| | |
|---|---|
| முகாம் | பயமுறுத்த |
| கூடாரம் → tent | வெள்ளைத்துணி |
| வாட்டினார் | துரத்தினர் |
| பயங்கரமான | அலறியடித்து |

பெயர்: ______________________ தேதி: ______________

வகுப்பு: ______________

வேற்றுமை

சரியான சொல்லின் எண்ணை அடைப்பினுள் எழுது.

ஓர் ஊரில், புகழ்பெற்ற மூன்று மருத்துவர்கள் நண்பர்களாக இருந்தார்கள். அவர்கள் தங்கள் (Q1)_________ இன்பமாகக் கழிக்க விரும்பினர். அதனால், இயற்கையழகு நிறைந்த ஒரு (Q2)__________ செல்ல முடிவெடுத்தனர். அங்குச் சென்றதும் ஒரு மோட்டார் படகை வாடகைக்கு எடுத்தார்கள். அதில் அமர்ந்து, (Q3)_________ பயணம் செய்தார்கள். மூவரும் மகிழ்ச்சியாகப் பேசிக்கொண்டிருந்தனர். திடீரென்று, அந்த மோட்டார் படகுக்குள் சிறிது சிறிதாக நீர் வரத் தொடங்கியது. அவர்கள் பதற்றம் அடைந்தனர். படகோட்டி படகிலிருந்த ஓட்டையை அடைக்க எவ்வளவோ முயற்சித்தான். ஆனால், (Q4)_________ முடியவில்லை. மூன்று மருத்துவர்களும் அவனுக்கு உதவி செய்தனர். அந்த (Q5)_________ முயற்சி பயன் அளிக்கவில்லை. இந்த (Q6)_________ எப்படித் தப்பிப்பது என்று யோசித்தனர். நால்வரும் கடலுக்குள் குதித்துக், கரையை நோக்கி நீந்தினர்.

Q1. (1) பொழுதில்
(2) பொழுதை
(3) பொழுதின்
(4) பொழுதோடு
( )

Q2. (1) தீவுடைய
(2) தீவிலிருந்து
(3) தீவிற்கு
(4) தீவை
( )

Q3. (1) கடலுக்கு
(2) கடலில்
(3) கடலால்
(4) கடலின்
( )

24. (1) அவனின்
(2) அவனுடைய
(3) அவனது
(4) அவனால் ( )

25. (1) நால்வரின்
(2) நால்வரில்
(3) நால்வருக்கு
(4) நால்வரோடு ( )

26. (1) நிலையால்
(2) நிலைக்கு
(3) நிலையிலிருந்து
(4) நிலையுடன் ( )

A2 செய்யுள் / பழமொழி

Q7 முதல் Q 12 வரையுள்ள செய்யுள் / பழமொழியை நிறைவு செய்வதற்கு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில் , அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (12 மதிப்பெண்கள்)

Q7. சுடினும் செம்பொன் தன்னொளி ______________.

(1) கெடாது
(2) படாது
(3) ஆறாது
(4) குறையாது

( )

Q8. அடக்கம் ______________ பொன் தரும்.

(1) இரண்டாயிரம்
(2) இருநூறு
(3) நூறு
(4) ஆயிரம்

( )

Q9. செயற்கரிய ______________ பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்.

(1) படிப்பார்
(2) அறியார்
(3) சொல்வார்
(4) செய்வார்

( )

Q10. அடாது செய்பவர் ______________ படுவர்.

(1) காணாது
(2) பாறாது
(3) ஆடாது
(4) படாது

( )

Q11. மகன்தந்தைக்கு ஆற்றும் ________________ இவன்தந்தை என்நோற்றான் கொல்எனுஞ் சொல்.

(1) கடன்
(2) செயல்
(3) உதவி
(4) பரிவு

( )

Q12. ________________ நண்பனை ஆபத்தில் அறியலாம்.

(1) அன்பான
(2) அழகான
(3) உண்மையான
(4) உயிருள்ள

( )

*B3 தெரிவுவிடைக் கருத்தறிதல்*

பின்வரும் கதையைக் கருத்தூன்றிப் படி.

முன்னொரு காலத்தில் அப்துல்லா என்றொருவன் வாழ்ந்தான். அவன் உடல்தான் பெருத்திருந்தது; அறிவோ மட்டம். தன் வாழ்நாள் முழுவதும் அவன் கிராமத்திலேயே தங்கி, *எளிமையான* வாழ்க்கையை நடத்திவந்தான்.

ஒருநாள் அப்துல்லா தன் அத்தையைக் காண மற்றொரு கிராமத்திற்குச் சென்றான். அத்தைக்கு அப்துல்லாவின் மேல் அதிகப் பாசம் உண்டு. அதனால் அன்று மதிய உணவிற்குச் சுவையான ஈரல் பொரியல் செய்து அவனுக்குப் பரிமாறினார். அதை உண்ட அப்துல்லாவுக்குப் பெருமகிழ்ச்சி. உடனே, அதைச் செய்யும் முறையை, அத்தையிடமிருந்து கேட்டு எழுதிக்கொண்டு, தனது சட்டைப் பையில் வைத்துக்கொண்டான். அன்று மாலை, தனது கிராமத்திற்குக் கிளம்பிய அப்துல்லா வழியில் கொஞ்சம் ஈரலை வாங்கிக்கொண்டான்.

அவன் வீடு திரும்பிக்கொண்டிருந்தபோது, வானத்தில் சில கழுகுகள் பறந்துகொண்டிருந்தன. அவற்றின் பார்வையெல்லாம், அப்துல்லாவிடம் இருந்த ஈரலின் மேலேயே பதிந்திருந்தது. அப்துல்லா சற்று கவனக்குறைவாக இருந்த *தருணத்தில்*, ஒரு கழுகு அவனிடமிருந்து ஈரலைப் பிடுங்கிக்கொண்டு பறந்தது.

அப்துல்லாவிற்கு முதலில் அதிர்ச்சி ஏற்பட்டது. ஒன்றும் புரியாமல் ஒரு சில கணங்கள் விழித்தான். பின்னர் என்னவோ தோன்ற, உரத்தக் குரலில் சிரிக்கத் தொடங்கினான். அருகே நடந்து போய்க்கொண்டிருந்தவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. எதற்காக இவன் இப்படியொரு சிரிப்புச் சிரிக்கிறான் என்று அறிய அவனிடம் *நெருங்கினர்*. "எதற்காக இப்படிச் சிரிக்கிறாய்?" என்று ஒருவன் கேட்டான்.

"என்னிடம் இருந்து ஈரலைப் பிடுங்கிவிட்டால் மட்டும் போதுமா? அதைப் பொரியல் செய்ய வேண்டுமே! அதைச் செய்யும் முறை எனது சட்டைப்பையில் பத்திரமாக இருக்கிறதே! இதுகூடத் தெரியாமல், அது ஈரலைப் பிடுங்கிக்கொண்டு போகிறது!" என்று சிரிப்பை அடக்க முடியாமல் அடக்கிக் கொண்டு அப்துல்லா கூறினான். எல்லாரும் திகைத்து விழிக்க, அவன் மீண்டும் சிரிக்கத் தொடங்கினான்.

*Q13 முதல் Q17 வரையுள்ள வினாக்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியையொட்டி அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு.*
*(5 X 2 = 10 மதிப்பெண்கள்)*

Q13 அப்துல்லா என்பவன் எப்படிப்பட்டவன்?

(1) பருமனானவன், எளிமையானவன், அறிவற்றவன்
(2) பருமனானவன், எளிமையற்றவன், அறிவற்றவன்
(3) அறிவுள்ளவன், எளிமையானவன், இளைத்தவன்
(4) அறிவற்றவன், ஆடம்பரமானவன், பருமனானவன்

( )

Q14 கிராமத்திற்குக் கிளம்பிய அப்துல்லா, வழியில் ஏன் கொஞ்சம் ஈரலை வாங்கினான்?

(1) அத்தையிடம் கொடுத்துச் சமைக்கச் சொல்வதற்காக
(2) வானத்தில் பறந்த கழுகுகளுக்கு இரை கொடுப்பதற்காக
(3) தானே அதைப் பொரியல் செய்து சாப்பிடுவதற்காக
(4) அத்தையிடம் தான் உண்ட ஈரலைத் திருப்பித் தருவதற்காக

( )

Q15 கழுகு எப்போது அவனிடமிருந்து ஈரலைப் பிடுங்கியது?

(1) அவன் கவனக்குறைவாக இருந்தபோது
(2) அவன் வீட்டிற்குத் திரும்பியபோது
(3) அவன் கொஞ்சம் ஈரலை வாங்கியபோது
(4) அவன் மகிழ்ச்சியாய் இருந்தபோது

( )

Q16 வழியில் போய்க்கொண்டிருந்தவர்கள் அப்துல்லாவை நெருங்கக் காரணம் என்ன?

(1) அப்துல்லா ஒன்றும் புரியாமல் சில கணங்கள் விழித்ததே
(2) அப்துல்லா உரத்தக் குரலில் சிரிக்கத் தொடங்கியதே
(3) கழுகு அவனது ஈரலைப் பிடுங்கிக்கொண்டு பறந்ததே
(4) அவனது சிரிப்பிற்கான காரணத்தை அறிந்துகொள்ளவே

( )

Q17 வழியில் சென்றவர்கள் ஏன் திகைத்தார்கள் ?

(1) அப்துல்லாவின் வேடிக்கையைப் பார்த்து
(2) அப்துல்லாவின் முட்டாள்தனத்தை எண்ணி
(3) அப்துல்லாவின் சிரிப்பைப் பார்த்து
(4) அப்துல்லாவின் அறிவுக்கூர்மையை எண்ணி

( )

*B4 சொற்பொருள்*

**Q18** *முதல்* **Q20** *வரையுள்ள சொற்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியில் இடம்பெற்றவை. அவற்றின் பொருளை உணர்த்தும் சரியான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர்,* **OAS** *விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு.* **(3 X 2 = 6** *மதிப்பெண்கள்)*

Q18 எளிமையான

(1) ஆடம்பரமற்ற
(2) வறுமையற்ற
(3) ஆடம்பரமான
(4) ஏழ்மையான

( )

Q19 தருணத்தில்

(1) நிமிடத்தில்
(2) வேளையில்
(3) விநாடியில்
(4) மணியில்

( )

Q20 நெருங்கினர்


(1) கூடி வந்தனர்
(2) ஓடி வந்தனர்
(3) விலகிச் சென்றனர்
(4) அருகில் சென்றனர்

( )

கருத்து விளக்கப்படக் கருத்தறிதல்

பின்வரும் விளம்பரத்தைக் கருத்தூன்றிப் படி;

# அமிரன் உணவகம்



சிறப்புச் சலுகை
குடும்பமாக மூவர் வந்தால்,
ஒரு பிள்ளை (ஐந்து
வயதுக்கும் கீழ்)
பாதி விலையில் உணலாம்.

88, குட்டி இந்தியா சாலை, சிங்கப்பூர் 64445678

தொலைபேசி எண் 63015838


## திறந்திருக்கும் நேரம்

காலை 10 மணி முதல்

வார நாள்களில் - இரவு 11 மணி வரை

வார இறுதி நாள்களில் & பொது விடுமுறை நாள்களில்

24 மணி நேர சேவை



- இலவச கார் நிறுத்தம் வசதி
- 100 பேருக்கு மேல் உணவு ஏற்பாடு - 30 % கழிவு

*பிறந்தநாள் மற்றும் திருமண பதிவு நிகழ்ச்சிகளுக்கு உணவகத்தில் குளுகுளு அறை வசதி கட்டணமின்றி ஏற்பாடு செய்து தரப்படும்.*

21 முதல் 23 வரை இடம்பெற்றுள்ள வினாக்கள் தரப்பட்டுள்ள விளம்பரத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. ( 6 மதிப்பெண்கள்)

21. இந்த உணவகத்தில் எப்போது 24 மணி நேரமும் உணவு உண்ணலாம் ?

(1) பொது விடுமுறை நாள்களிலும் வார இறுதி நாள்களிலும்
(2) பொது விடுமுறை நாள்களிலும் வார நாள்களிலும்
(3) திங்கள் முதல் வியாழன் வரை ( )
(4) எல்லா நாள்களிலும்

22. இந்த உணவகத்தில் யாருக்குச் சிறப்புச் சலுகை வழங்கப்படுகிறது ?

(1) மூவர் கொண்ட குடும்பம்
(2) இரண்டு பெரியவருடன் வரும் பிள்ளை ( )
(3) பெற்றோருக்கும் பிள்ளைக்கும்
(4) பிள்ளையுடன் வரும் மூத்த குடிமகன்

23. 120 பேர்களுடன் திருமண பதிவு கொண்டாடுபவருக்கு என்னென்ன சலுகைகள் கிடைக்கும் ?

(1) இலவச போக்குவரத்து வசதியும் 10% கழிவு இடவசதியும்
(2) போக்குவரத்து வசதியும் இலவச உணவு வசதியும்
(3) கட்டணமின்றி இடவசதியுடன் சிறப்பு சலுகையும் ( )
(4) கட்டணமின்றி இடவசதியுடன் 30 % கழிவு

பின்வரும் பகுதியில் Q24 முதல் Q28 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்குப் பொருத்தமான ஒலி வேறுபாட்டுச் சொற்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. சரியான விடைகளை தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது.

ஒலி வேறுபாட்டுச் சொற்கள் (10 ம.பெ)

***சரியான சொல்லின் எண்ணை அடைப்பினுள் எழுது.***

24. நெடுந்தூரம் நடந்ததால் உனக்குத் தாகம் எடுத்தது. அதனால் நீ தண்ணீர் ______________. ( )

25. என் வீட்டு வரவேற்பு ______________ அழகாக இருக்கும். நாங்கள் அங்கு அமர்ந்து தொலைக்காட்சி பார்ப்போம். ( )

26. என் தந்தை தொழிற்சாலையில் ______________ புரிகிறார். அவர் அன்றாடம் காலை ஏழு மணிக்கு வேலைக்குச் செல்வார். ( )

27. என் செல்லப்பிராணி ஒரு பச்சைக்கிளி. அதன் ______________ வளைந்து இருக்கும். ( )

28. எவரஸ்ட் ______________ மிகவும் உயரமானது. அதில் ஏறி சிலர் சாதனை படைத்துள்ளனர். ( )

| | |
|---|---|
| (1) அருந்து | (2) பணி |
| (3) பனி | (4) அறை |
| (5) மழை | (6) அழகு |
| (7) அலகு | (8) அறுந்து |
| (9) அரை | (10) மலை |

முன்னுணர்வுக் கருத்தறிதல் (14 மதிப்பெண்கள்)

கீழ்க்காணும் பகுதியில் Q29 முதல் Q35 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு ஏற்ற விடைகளைத் தேர்ந்தெடுத்துக் கோடிட்ட இடங்களில் எழுதவும். (14 மதிப்பெண்கள்)

நவநாகரிக நங்கை ஒருத்தி ஒரு சமயம் பெர்னாட்ஷாவைப் பார்க்க வந்திருந்தாள். அவள் அப்போது அவரை **Q29** ____________________, "பபெர்னாட்ஷா அவர்களே! என்னைப் பார்த்தால் எத்தனை வயதிருக்கும் என்று தெரிகிறது?" என்று கேட்டாள்.

அதைக் கேட்ட பெர்னாட்ஷா, அந்த அம்மையாரை ஒருமுறை ஏற இறங்க **Q30** ____________________ பிறகு புன்சிரிப்பு சிரித்தவண்ணம், இவர் என்ன பதில் சொல்லப் போகிறார் என்று ஆவலோடு எதிர்பார்த்து நின்ற அவ்வம்மையாரிடம், "உங்கள் பற்களை **Q31** ____________________ பதினெட்டு வயது இருக்கும் என்று தெரிகின்றது. தலை **Q32** ____________________ பார்த்தால் பத்தொன்பது இருக்கலாம் என்று தோன்றுகிறது. நீங்கள் நடந்துகொள்கின்ற **Q33** ____________________ பார்த்தால் பதினான்கு வயதுப் பெண் மணிபோல காணப்படுகின்றது." என்று கூறினார்.

அதைக் கேட்ட அவ்வம்மையாரின் உள்ளத்தில் மகிழ்ச்சி **Q34** ____________________. அப்பெண்மணி பெர்னாட்ஷாவிடம் தன் வயதைக் கூறும்படி மீண்டும் **Q35** ____________________ விடுத்தார். பெர்னாட்ஷா கொஞ்சம்கூட தயங்காமல் உடனே, "சரி, மூன்று எண்களையும் கூட்டிப்பாருங்களம்மா! 51 வயது!" என்று திட்டவட்டமாகச் சொல்லி விட்டார்.

| | | |
|---|---|---|
| தட்டி | அடைந்தது | வேண்டுகோள் |
| பாதையை | பார்த்தார் | எண்ணிப்பார்த்தால் |
| காண்கையில் | கட்டளை | பொங்கியது |
| ரோமத்தை | தன்மையை | நோக்கி |

சுயவிடைக் கருத்தறிதல் ( 20 மதிப்பெண்கள்)

பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படித்து, அதனடியில் காணும் வினாக்களுக்கு உன் சொந்த நடையில் விடை எழுது.

ராமசாமி மிகவும் அன்பாக ஒரு நாயை வளர்த்து வந்தான். அவன் தன்னுடைய வறுமை நிலையின் காரணமாக, ஒரு சமயம் தன்னுடைய நாயை ஒரு செல்வந்தரிடம் ஈடு வைத்து ஐந்நூறு வெள்ளி கடன் வாங்கினான். நாய் அச்செல்வந்தரிடம் இருந்து வளர்ந்நது.

சில நாட்கள் சென்றன. ஒரு நாள் கள்வர்கள் சிலர் செல்வந்தருடைய வீட்டில் களவாடச் சென்றனர். கள்வர்கள் அச்செல்வந்தருடைய வீட்டை நெருங்கிய சமயத்தில், அந்த நாய் குரைத்து எல்லோரையும் எழுப்பியது. நாய் கள்வர்கள் மீது பாய்ந்து கடித்து அவர்களைத் துரத்தியது. கள்வர்கள் தப்பினால் போதும் என்று ஓடிவிட்டனர்.

நாயின் செயல் அச்செல்வந்தருக்கு மிக்க மகிழ்ச்சியை அளித்தது. உடனே அவர் ஒரு காகிதத்தில், "நாய் நேற்றிரவு என் வீட்டில் களவாடுவதற்கு வந்த கள்வர்களைக் கடித்துத் துரத்தியதுடன் என்னையும் எழுப்பிவிட்டது. அதனுடைய செய்கையால் என் செல்வம் களவு போகாமல் தப்பியது. நாய் செய்த இப்பேருதவிக்காக, நான் உனக்குக் கடனாகக் கொடுத்த ஐந்நூறு வெள்ளியையும் உனக்கு நன்கொடையாக்கி விட்டேன். இனி எனக்குக் கடன் தொகையைக் கொடுக்க வேண்டியதில்லை." என்று எழுதி, நாயின் கழுத்தில் அதை வைத்துக் கட்டி, அதனுடைய தலைவனிடம் செல்லுமாறு அதற்குக் குறிப்பு காட்டினார். நாயும் அவ்வாறே ராமசாமியிடம் சென்றது.

ராமசாமி, தன்னுடைய நாயின் வருகையைக் கண்டு, இந்நாய் அவனை ஏமாற்றி விட்டு வந்து விட்டது என்று எண்ணிக் கடுங்கோபம் கொண்டான். உடனே ஒரு தடியை எடுத்து நாயின் மண்டையில் ஓங்கி அடித்தான்.

நாய் இறந்து வீழ்ந்தது. அதன் கழுத்தில் இருந்த சீட்டை எடுத்து அவன் படித்துப் பார்த்தான். செய்தியை அறிந்ததும் சிந்தை கலங்கிக் கண்ணீர் வடித்தான். எப்பொழுதும், எதையும் சிந்தித்துப் பார்த்துவிட்டுச் செயல்படும்போதுதான் அசம்பாவிதங்கள் நிகழாமல்

இருக்கின்றன. இந்த உண்மையை நாமும் உணர்ந்து கொண்டால் ராமசாமியின் கதி நமக்கு ஏற்படாமல் இருக்கும்.

விடை எழுது.
---------------

36. ராமசாமி எவ்வாறு தன் வறுமையைச் சமாளிக்க எண்ணினான்? (3)

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

37.கள்வர்கள் வீட்டை நெருங்கியதும் நாய் என்ன செய்தது?(3)

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

38.மகிழ்ச்சியடைந்த செல்வந்தர் என்ன செய்தார்?(5)

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

39.ராமசாமி ஏன் கடுங்கோபம் அடைந்தான்?(3)

40.ராமசாமியின் கடுங்கோபத்தால் என்ன நிகழ்ந்தது?(3)

41.இக்கதை நமக்கு எதை உணர்த்துகிறது?(3)

# P5 SA2
# TESTPAPER 15

ஓர் ஊரில் புகழ் ...

1)2 2) 3 3) 2 4) 4 5) 1 6) 3 7) 1 8) 4 9) 4 10) 4 11)3 12) 1

13) 1 14)3 15) 1 16) 4 17) 2 18) 1 19) 2 20) 4 21) 1 22) 2

23) 4 24) 1 25) 4 26) 2 27) 7 28) 10 29) நோக்கி 30) பார்த்தார்

31) காண்கையில் 32) ரோமத்தை 33) தன்மையை 34)பொங்கியது

35)வேண்டுகோள்

36) ராமசாமி ஒரு செல்வந்தரிடம் தன்னுடைய நாயை ஈடாக வைத்து ஐந்நூறு வெள்ளி கடன் வாங்கி தன் வறுமையை சமாளிக்க எண்ணினான்.

37)கள்வர்கள் வீட்டை நெருங்கியதும் நாய் குரைத்து எல்லோரையும் எழுப்பியது. மேலும் கள்வர்கள் மீது பாய்ந்து கடித்து அவர்களைத் துரத்தியது.

38) மகிழ்ச்சி அடைந்த செல்வந்தர் ஒரு காகிதத்தில் ராமசாமிக்கு ஒரு குறிப்பு எழுதினார்.அதில் நாய் தன்னுடைய செல்வம் களவு போகாமல் பாதுகாத்து பேருதவி செய்ததாகக் குறிப்பிட்டார்.அதனால் ராமசாமி தனக்குத் தர வேண்டிய கடன் தொகையான ஐந்நூறு வெள்ளியை திரும்பத் தர வேண்டியதில்லை என்றும் எழுதி நாயின் கழுத்தில் அதை வைத்துக் கட்டி அதனை ராமசாமியிடம் செல்லுமாறு குறிப்பு காட்டினார்.

39)ராமசாமி தன்னுடைய நாய் செல்வந்தரை ஏமாற்றி விட்டு வந்து விட்டது என்று எண்ணியதால் கடுங்கோபம் அடைந்தான்.

40) ராமசாமி ஒரு தடியை எடுத்து நாயின் மண்டையில் ஓங்கி அடித்தான்.அதனால் நாயும் இறந்து வீழ்ந்தது.இதுவே ராமசாமியின் கடுங்கோபத்தால் நிகழ்ந்த சம்பவமாகும்.

41) எப்பொழுதும், எதையும் சிந்தித்துப் பார்த்துவிட்டுச் செயல்படும்போதுதான் அசம்பாவிதங்கள் நிகழாமல் இருக்கும் என்பதையே இக்கதை நமக்கு உணர்த்துகிறது.